மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

ஆசிரியர் நியமனம்

*__580—திருமதி ஆர். சாந்தி:__

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிக்கு ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் வாழவந்திநாடு, அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி மற்றும் செங்கறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் 844 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். மேலும், அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட தொடக்கப் பள்ளிகள் இரண்டில் 167 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட

2012 ஏப்ரல் 18]

6 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. காலிப் பணியிடங்கள் ஏதுமில்லை. இரண்டு மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 37; அதில் 17 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்சமயம் 20 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 12–ம்; பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 8–ம் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நிரப்பிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் வாழவந்திநாடு மற்றும் செங்கரையில் அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளியில் 892 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். இந்த இரண்டு பள்ளிகளிலும் 41 ஆசிரியர் பணியிடங்களில் 18 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். மீதி 23 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அந்த 23 ஆசிரியர் காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *நாமக்கல் மாவட்டத்தில் அரசு உண்டி, உறைவிட ஆரம்பப் பள்ளிகள் 6 உள்ளன. இவற்றில் மொத்தம் 268 மாணவ மாணவியர் பயின்று வருகின்றார்கள். அனுமதிக்கப்பட்ட 13 ஆசிரியர் பணியிடங்களில், 13 ஆசிரியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். ஒரு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதில் 505 மாணவியர் தங்கிப் பயின்று வருகிறார்கள். அனுமதிக்கப்பட்ட 7 ஆசிரியர் பணியிடங்களில், 5 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 2 பணியிடங்கள் காலியாக உள்ளன. 3 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 1,282 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். அனுமதிக்கப்பட்ட 73 ஆசிரியர் பணியிடங்களில் 52 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், 21 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஆக மொத்தம் நாமக்கல்*

மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 93 ஆசிரியர் பணியிடங்களில் 70 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 23 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமே நிரப்பப்பட்டு வருகின்றன. இதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக விரைவில் நிரப்புவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

பேருந்து வசதி

***17663—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்திலிருந்து பொன்னேரி, தடபெரும்பாக்கம், கே.என். கண்டிகை, வெள்ளகுளம், தேவதானம், காணியம்பாக்கம், கல்பாக்கம் வழியாக மீஞ்சூர் வரை பேருந்தினை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், தடபெரும்பாக்கம், கே.என். கண்டிகை, வெள்ளகுளம், தேவதானம், காணியம்பாக்கம், கல்பாக்கம் ஆகிய கிராமங்கள் மக்கள் தொகை அடிப்படையில் வளர்ந்துவரும் பகுதிகளாகும். எனவே, பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேற்படி வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். புதிய பேருந்துகளுக்கான கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்று